**S.C.No.56/2023**

**PW. 17 : சண்முகம்**

**தேதி : 23.02.2026**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்) (1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகியுள்ளார்கள்.)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**Cr.M.P.93/2026, 94/2026, 115/2026 மனுவில் 20.02.2026 தேதியன்று உத்தரவிடப்பட்டு சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 1, 2, 3 எதிரிகள் தரப்பு பொதுவான குறுக்கு விசாரணை**

நான் 01.10.2019–லிருந்து குப்பம் கிராமத்தில் கிராமநிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ இடம் எனக்கு பரிட்சையமான இடம்தான். குப்பம் கிராமத்தில் 10 குவாரி இருக்கும் தோராயமாக 10 கிரசர் இருக்கலாம். ஜெகநாதன் தோட்டத்திற்கு சென்றுள்ளேன். ஜெகநாதன் தோட்டத்திற்கு சுற்றுவட்டாரத்தில் குவாரிகள் உள்ளது. ஒவ்வொரு குவாரிக்கும் உள்ள இடைவெளி எனக்கு தெரியாது. செல்வக்குமாரின் கிரசர் ஜெகநாதன் வீட்டிலிருந்து மேற்குப்புறமாக உள்ளது என்றால் சரிதான். ஜெகநாதன் மற்றும் செல்வக்குமார் ஆகியோருடைய நிலத்தின் புலவரைபடமும் தாக்கல் செய்யவில்லை. கிராமத்தில் செல்வவிநாயகா கிரசர்ஸ், புதுக்காளியம்மன் கிரசர்ஸ், சிதம்பரம் கிரசர்ஸ் ஆகிய குவாரிகள்

உள்ளது என்றால் கிராமத்தில் உள்ளது. சாட்சி பெரியசாமியை எனக்கு தெரியும். சாட்சி பெரியசாமியின் வீடு ஜெகநாதன் வீட்டிற்கும் அன்னை குவாரிக்கும் இடையில் உள்ளது. எதிரி செல்வக்குமார் பெயரில் கிரசர் மட்டும் தான் இருந்தது. குவாரிக்கு லைசென்ஸ் விண்ணப்பித்திருந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் S மாதிரி வளைவு இருக்கும் என்றால் வண்டி மோதிய இடம் மேற்சொன்னவாறு உள்ளது. தார் ரோட்டின் இருபுறமும் தண்ணீர் செல்லும் வடிகால் 2 அடிக்கு நீளமாக சென்றுகொண்டிருந்தது என்று சொன்னால் சரிதான். சண்முகம் காட்டிற்கு அருகில் வேறு யாருடைய காடுகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகாமையில் ஒரு சிறிய கிராமம் உள்ளது அந்த கிராமத்தின் பெயர் கொட்டகாளிப்பாளையம் என்று சொன்னால் சரிதான். நீங்கள் சம்பவ இடத்திற்கு எப்போது சென்றீர்கள் என்றால் மாலை 6.30–7.00 மணி சுமாருக்கு சென்றேன். நீங்கள் செல்லும்போது சம்பவ இடத்தில் உடல் இருந்ததா என்றால் இல்லை. அந்த இடத்தில் 10, 15 பேர் நான் செல்லும்போது இருந்தார்கள். ஆம்புலன்சில் உடலைக்கொண்டு சென்றதாக சொன்னார்கள். அது எத்தனை மணிக்கு கொண்டு சென்றார்கள் என்று மணி தெரியாது. நீங்கள் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்றால் நான் சுமார் கால் மணி நேரம் இருந்தேன். நான் செல்லும்போது காவல்துறையினர் சம்பவ இடத்தில் இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.23 18:24:36 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**S.C.No.56/2023**

**PW.18 : உதயகுமார்**

**தேதி : 23.02.2026**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்) (1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகியுள்ளார்கள்.)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**<u>Cr.M.P. 93/2026, 115/2026 மனுவில் 20.02.2026 தேதியன்று உத்தரவிடப்பட்டு சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 1 மற்றும் 3 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நீங்கள் அ.சா.ஆ.24 முதல் தகவல் அறிக்கையை நான் பதிவு செய்த பிறகு தான் ஆய்வாளர் விசாரணையை தொடங்கினார். காலை 5.00 மணிக்கு ஆய்வாளரிடம் நான் முதல் தகவல் அறிக்கையை கொடுத்தேன். நீதித்துறை நடுவருக்கும், காவல் உயர் அதிகாரிகளுக்கும், காவல் ஆய்வாளருக்கும் ஒரே சமயத்தில் தான் முதல் தகவல் அறிக்கையை அனுப்பி வைத்தேன். புகாரில் என்ன தகவல்கள் உள்ளதோ அதன் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்ய வேண்டும். அ.சா.ஆ.2 புகாரில் புகார்தாரரின்

கணவர் வெட்டுக்காட்டுதோட்டத்திலிருந்து காருடையாம்பாளையம் வரும்போது தான் ஜெகநாதனுக்கு விபத்து ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வெட்டுக்காட்டுதோட்டத்திலிருந்து காருடையாம்பாளையத்திற்கும் இடையே சுமார் 5 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். புகாரில் சொல்லப்படாத குப்பம்–காருடையாம்பாளையம் என்று கூறப்படாத வார்த்தை முதல் தகவல் அறிக்கையில் சம்பவ இடமாக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தூள்சண்முகம் காட்டிற்கு அருகில் வரும்போது விபத்து ஏற்பட்டதாக புகாரில் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வெட்டுக்காட்டுத்தோட்டத்திலிருந்து காருடையாம்பாளையம் செல்லும் வழியில் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது குறிப்பிட்டு தூள்சண்முகம் என்று குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு கூறப்படாத தூள்சண்முகம் இடத்தை சம்பவ இடமாக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நீங்கள் முதல்விசாரணையின் போது சொன்ன தகவல் அனைத்தும், அ.சா.1 காவல்நிலையம் ஆஜராகி எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும் அ.சா.ஆ.2 புகார் விசாரணை தொடங்கி பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட புகார் என்று சொன்னால் சரியல்ல. பொய்யாக தயார் செய்யப்பட்ட அ.சா.ஆ.2 புகாரினை அடிப்படையில் அ.சா.ஆ.24 முதல் தகவல் அறிக்கை தாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற சொ்னனால் சரியல்ல. அவ்வாறு தாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததால்தான் நீதிமன்றத்திற்கு தாமதமாக அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.25 மருத்துவமனையிலிருந்து காவல்நிலையத்திற்கு பெறப்பட்ட தகவலாகும். மருத்துவமனையிலிருந்து அடையாளம் தெரியாத நபருக்கு ஏற்பட்ட விபத்து என்ற தகவல் மறைக்கப்பட்டு பின்னிட்டு எதிரிகளுக்கு எதிராக இந்த புகார் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

இவ்வழக்கு முதலில் விபத்து வழக்காக பதிவு செய்யப்பட்டு சமூக நல ஆர்வளர்கள் ஆர்பாட்டத்தால் கொலை வழக்க்காக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் உண்மை சம்பவமும் உண்மை புகாரும் மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**Cr.M.P.94/2026 மனுவில் 20.02.2026 தேதியன்று உத்தரவிடப்பட்டு சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்படி 1, 3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையை 2ஆம் எதிரி தரப்பில் தனது தரப்பாக ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.02.23 18:24:42 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**S.C.No.56/2023**

**PW.19 : ராதாகிருஷ்ணன்**

**தேதி : 23.02.2026**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்) (1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகியுள்ளார்கள்.)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**Cr.M.P. 93/2026, 115/2026 மனுவில் 20.02.2026 தேதியன்று உத்தரவிடப்பட்டு சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 1, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.2 புகாரில் சொல்லப்படாத குப்பம்–காருடையாம்பாளையம் என்று கூறப்படாத வார்த்தை அ.சா.ஆ.24 முதல் தகவல் அறிக்கையில் சம்பவ இடமாக குறிப்பிடப்பட்டுள்ளது என சார்பு ஆய்வாளர் உதயகுமார் எவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்ற விவரத்தை நீங்கள் கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் நான் உதயகுமாரை விசாரணை செய்யவில்லை. அ.சா.ஆ–24 ல் உள்ள குறைபாடு பற்றி நான் எனது 2 நாள் விசாரணையில் கேட்டுத்

தெரிந்துகொள்ளவில்லை. முதல் தகவல் அறிக்கையை பெற்றுக்கொண்ட பின்னர் சம்பவ இடத்தை 6.00 மணிக்கு பார்வையிட்டு அதிலிருந்து நான் தொடங்கினேன். இறந்துநபரின் உடல் நான் புலன்விசாரணை தொடங்கிய போது சம்பவ இடத்தில் இல்லை. கொலைவழக்கு சம்மந்தமாக விசாரணை தொடங்கும்போது சம்பவ இடத்தில் இறந்த நபரின் உடல் இல்லாதது குறித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் புகாரிலேயே இறந்த நபரின் உடல் மருத்துவமனையில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்த நபரின் உடலை மருத்துவமனைக்கு யார் மூலமாக எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது என்று சொன்னால் மருத்துவமனைக்கு பொன்னுசாமி மற்றும் மோகன்ராஜ் என்பவர் மூலம் ஆம்புலன்சில் அனுப்பி வைத்துள்ளார்கள். மோகன்ராஜ் ஜெகநாதனுக்கு உறவினர். பொன்னுசாமி ஜெகநாதனுக்கு நன்கு பரிட்சையமான நபர். அ.சா.ஆ.26 இறந்த நபரை மருத்துவமனையில் சேர்த்தபோது பதிவு செய்த விபத்து பதிவேடு என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.26 விபத்து பதிவேட்டில் இறந்து நபர் யாரென்று தெரியாது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.26 ல் மருத்துவமனைக்கு கொண்டு வந்த ஆம்புலன்ஸ் டிரைவரின் பெயரும் அவரது போன் நம்பரும் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் என்னுடைய 2 நாள் விசாரணையில் ஆம்புலன்ஸ் டிரைவரை விசாரிக்கவில்லை. குப்பம் – காருடையாம்பாளையம் செல்லும் தார் சாலையில் இருபுறமும் நீர்போகும் பள்ளம் உள்ளது. அ.சா.ஆ.12 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.34 வரைபடத்தில் தார்சாலையில் இருபுறமும் நீர்செல்லும் பாதை காட்டவில்லை என்று சொன்னால் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. அ.சா.ஆ.34 வரைபடத்தில் பள்ளம் என்று குறிப்பிட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வரைபடத்தில் சம்பவ இடத்தில் உள்ள

சக்கரத்தின் தாரைகளை குறிப்பீடு செய்யவில்லை. அ.சா.ஆ.34 வரைபடத்தில் குறிப்பிட்டு சம்பவ இடமாக காட்டப்பட்டுள்ள இடத்தில் தான் சம்பவம் நடைபெற்றது என்று எவ்வாறு முடிவு செய்தீர்கள் என்றால் வாகனத்தினால் விபத்துஏற்பட்டபோது வாகனத்தின் உடைந்த பாகங்கள் கிடந்ததை வைத்து சம்பவ இடமாக குறிப்பிட்டுள்ளேன். அ.சா.ஆ.12 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.34 வரைபடத்தில் அவ்வாறு வாகனத்தில் உடைந்த பாகங்கள் இருந்ததாக குறிப்பில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.12 பார்வை மகஜரில் வேலி கம்பி இருந்ததாகவோ அது சேதம் அடைந்ததாக குறிப்பில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் கிடந்த உதிரி பாகங்களை நீங்கள் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான் நான் வாகனத்தை கைப்பற்றியுள்ளேன். வாகனத்தை காவல்நிலையத்திற்கு ரெகவரி வாகனத்தின் உதவியுடன் எடுத்துச்செல்லப்பட்டது. நான் ரெகவரி வேனை ஓட்டிச்சென்ற நபரை சாட்சியாக விசாரிக்கவில்லை. அ.சா.ஆ.14 கைப்பற்றுதல் மகஜரில் எந்த வழக்கிற்காக கைப்பற்றப்பட்டது என்று குற்ற எண் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். விசாரணை துவங்கிய பின்னிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதால் தான் குற்ற எண். குறித்து குறிப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. பரமத்திலிருந்து கிரேன் சர்வீஸ் வரவைக்கப்பட்டது அந்த நிறுவனத்தின் பெயர் தெரியவில்லை. அவர்களை விசாரித்தால் தான் எந்த வாகனத்தை எத்தனை மணிக்கு எங்கிருந்து எடுத்துச்சென்றார்கள் என்ற விவரம் தெரியும் என்று சொன்னால் சரிதான். முதல் விசாரணையில் சொன்னது போன்று சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் அங்கு வைத்து பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றும், சொன்ன மாதிரி சான்றுபொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றும் காவல்நிலையத்தில்

வைத்து ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.35 பிரேத விசாரணை அறிக்கையின் படி இறந்த நபரை முதல்முதலாக பார்த்த நபர் மோகன்ராஜ் என்று சொன்னால் உயிருடன் இருந்தபோது பெரியசாமி பார்த்துள்ளார் இறந்தபிறகு மோகன்ராஜ் தான் முதல்முதலில் பார்த்துள்ளார். இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாகசொல்லப்பட்டுள்ள சாட்சி பொன்னுசாமி இவ்வழக்கிற்காக கண்ணுற்ற சாட்சியாக உருவாக்கப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பொன்னுசாமி பிரேத விசாரணை சாட்சி என்றால் சரிதான். இவ்வழக்கு விசாரணை அனைத்தும் ஒருதலைபட்சமாக செய்யப்பட்டுள்ளது என்றும் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து பிரேத விசாரணை முடித்து விட்டு மருத்துவமனையில் வந்து சாட்சிகளை விசாரித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு நான் விசாரித்துள்ள சாட்சிகளின் வாக்குமூலங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று சம்பவ இடத்தில் வைத்து விசாரித்த சாட்சிகள் பொன்னுசாமி, சந்தோஷ், புவனேஷ் ஆகியோரின் வாக்குமூலங்களை வழக்கிற்கு பாதகமான இருக்கும் என்பதால் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பொன்னுசாமியை நீங்கள் விசாரித்தபோது பொன்னுசாமி சக்திவேல் என்பவரது பெயரை பின்னால் விசாரித்து தெரிந்து கொண்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் பொன்னுசாமி யார் மூலமாக விசாரித்து தெரிந்துகொண்டதாக குறிப்பில்லை என்று சொன்னால் சரிதான். **12.09.2022 ஆம் தேதி தயார் செய்யப்பட்ட படிவம் 91 ன் எண் I0852462 என்று உள்ளது என்று சொன்னால் சரிதான். அது நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு**

**செய்யப்பட்டுள்ளது. 11.09.2022 ஆம் தேதி தயார் செய்யப்பட்ட படிவம் 91 ன் எண் I0852463 என்று உள்ளது என்று சொன்னால் சரிதான். அது நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** நீங்கள் முதல் விசாரணையில் கூறியது போல் சான்று பொருட்களை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் முதல்விசாரணையில் கூறியது போல் 1மற்றும் 3 எதிரிகளை சொன்ன நாளான்னு சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1, 3 எதிரிகள் தானாக முன்வந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து குறித்து காவல்நிலையத்தில் தகவல் தெரிவிக்க வந்த 1ஆம் எதிரியை காவல்நிலையத்தில் நீங்கள் சட்டவிரோதமாக கைது செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபரின் பிரேதத்தை வாங்க மறுத்து பல சமூக ஆர்வலர்கள் போராட்டம் நடத்தினார்கள் என்று சொன்னால் சரிதான். போராட்டம் செய்த அழுத்தத்தினால் தான் விபத்தை கொலைவழக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் குவிமுச 164 பிரிவு வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டுகோள கடிதம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் விசாரித்த வகையில் எந்த எதிரியிடமும் அவர்களின் தொலைபேசி எண்களை தெரிந்து கொண்டு அவர்களின் தொலைபேசியை கைப்பற்ற முயற்சி செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் எதிரியிடம் மொபைல் போனே கிடையாது என்று சொன்னால் நான் கைது செய்யும்போது இல்லை. 1 மற்றும் 3 எதிரிகளுக்கு வழக்கில் எந்த சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1, 2, 3 எதிரிகளுக்கு இடையே எந்த குற்றத்தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பொன்னுசாமியை நீங்கள் விசாரித்தபோது செல்வக்குமார் கிரசர் நடத்தி வருவதால் ஆடு மாடு

ஓட்டுவதிலும், புகையாகவும் இருந்ததால் அவர்களுக்கு இடையே பிரச்சனை இருந்தாக கூறியுள்ளார் என்று சொன்னால் முன்விரோம் இருந்தது என்று கூறியுள்ளார் மேற்சொன்ன காரணத்தை குறிப்பிட்டு கூறவில்லை. வேகமான வந்த வண்டியை பார்த்தவுடன் ஜெகநாதன் ஓரமாக வண்டியை நிறுத்திவிட்டார் என்று உங்கள் விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. ஜெகநாதன் வண்டி பேனட் மேல் சிக்கிக்கொண்டார் என்றும் வண்டி நின்று அதன்பின் வண்டியை மீண்டும் இயக்கி 6, 7 வேலிக்கற்களை கடந்து தூள்சண்முகம் காட்டிற்குள் கீழே விழுந்துவிட்டார் என்று உங்கள் விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. தூள்சண்முகம் காட்டிற்குள் ஜெகநாதன் விழுந்தவுடன் மீண்டும் அவர்கள் பிக்கப் வண்டியை இயக்கிய போது நான் அவர்கள் வண்டியை இயக்கியதை தடுத்தேன் என்று பொன்னுசாமி உங்கள் விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. ஆம்புலன்ஸ் சென்றுவிட்டதால் நாஙகள் மருத்துவமனைக்கு சென்றோம். நானும் மோகன்ராஜ் ஒரு வண்டியிலும் பெரியசாமி கரூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் அப்போது 7.00 மணி இருக்கும். மோகன்ராஜ் மீது நான் வாந்தி எடுத்துவிட்டேன். அப்போது இறங்கி நின்று டீக்குடித்து விட்டு கரூர் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது ஜெகநாதன் பாடி வரவில்லை என்றும் அதன்பிறகு வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு ஜெகநாதன் உடலை எடுத்துச்சென்றுவிட்டதாக கேள்விப்பட்டு அங்கும் ஜெகநாதன் பாடி இல்லை என்று மீண்டும் கரூர் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு ஜெகநாதன் பாடியை இறக்கி வைத்திருந்தாரக்ள் என்றும் அங்கு சென்ற போது இரவு 9.00 மணி இருக்கும் என்று என் விசாரணையில் கூறவில்லை. ரேவதி புகார் கொடுத்தபோது பொன்னுசாமி தான் சங்கதிகளை விவரங்களை கூறினார் என்று உங்கள்

விசாரணையில் பொன்னுசாமி கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.3 மோகன்ராஜ் நீங்கள் விசாரித்தபோது பின்வருமாறு கூறியள்ளாரா என்றால் என் மாமா ஜெகநாதன் வெட்டுக்காட்டுத்தோட்டத்தில் விவசாயம் செய்து வந்தார் என்றும் அவர் வாழ்வாதாரமே விவசாயம் என்றும் கிரசர் பக்கத்திலே இருந்தால் புகை அடிக்கும் என் மாமா விவசாயம் செய்யமுடியவில்லை என்றும் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. மேலும், இறந்தஜெகநாதன் Environmental Engineer டம் பெட்டிசன் கொடுத்தார் என்றும் அதன் மேல் நடவடிக்கை எடுக்காததால் 03.09.2022 ம் ஆம் தேதி முதலமைச்சர் மற்றும் கரூர் மாவட்ட ஆட்சியரிடம் மனுக்கொடுத்தார் என்றும் அதனால் 08.09.2022 ஆம் தேதி கலெக்டர் அலுவலத்திலிருந்து சீல் வைத்தார்கள் என்றும் 09.09.2022 ஆம் தேதியன்று என் மாமா ஜெகநாதனை கொங்கு மெஸ்ஸில் வைத்து சந்தித்தேன் என்றும் அப்போது என் மாமா ஜெகநாதன் குவாரிக்கு சீல் வைக்கும்போது நான் அங்கு தான் இருந்தேன் அப்போது செல்வக்குமார் என் மாமாவை பார்த்து நீ இருக்கும் வரை என்னால் குவாரி நடத்த முடியாது என்றும் என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தான் என்றும், அந்த சமயத்தில் ஜெகநாதன் மாமா பெரியசாமி இருந்தார் என்றும் ஜெகநாதன் அ.சா.3 மோகன்ராஜிடம் சொன்னதாகவும், அதற்கு தைரியமாக இருங்கள் நாங்கள் இருக்கிறேன் என்று சொன்னதாகவும் உங்கள் விசாரணையில் கூறயுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 பொன்னுசாமி அ.சா.3 மோகன்ராஜிடம் தூள்சண்முகம் காட்டுப்பக்கத்தில் உன் மாமா ஜெகநாதனை அடித்து கொன்று இழுத்து சென்றதாக அ.சா.3 மோகன்ராஜ் உங்களிடம் வாக்குமூலம் அளித்தாரா என்றால் வாகனம் மோதியது என்று கூறியுள்ளார். 3133 என்ற எண் கொண்ட வண்டி Honda Passion என்ற வாகனம் என்று சொன்னால் தவறு அது Honda Shine. Bolero Pickup–ன் இரண்டு சக்கரத்தின்

நடுவில் ஜெகநாதன் கிடக்கிறார் என்று அ.சா.3 மோகன்ராஜ் கூறியுள்ளாரா என்றால் இல்லை. மோகன்ராஜ் சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்ததாகவோ, அதற்கு 65 பி சான்றிதழ் வழங்கியதாகவோ கூறவில்லை என்று சொன்னால் சரிதான். Pickup வண்டியுடன் இருந்த டீசல் பேரலை வாகனத்துடன் கைப்பற்றி நீதமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நீங்கள் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் அனைத்தும் பொய்வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக தயாரிக்கப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல.

**<u>Cr.M.P.94/2026 மனுவில் 20.02.2026 தேதியன்று உத்தரவிடப்பட்டு சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நீங்கள் எவ்வளவு நேரம் சம்பவ இடத்தில் இருந்தீர்கள் என்றால் நான் 6.00–8.00 மணி வரை இருந்தேன். நீங்கள் தான் காவல்நிலையத்திற்கு உடைந்த இருசக்கர வாகனத்தையும், உடைந்த நான்கு சக்கர வாகனத்தையும் காவல்நிலையத்திற்கு எடுத்துச்சென்றீர்கள் என்றால் 11.09.2022 ஆம் தேதியன்று தடயவியல் அறிவியல் துறையினர் எத்தனை மணிக்கு யார் சொல்லி வந்தார்கள் என்றால் நான் சொல்லி வரவில்லை. தனிப்பிரிவிலிருந்து தடயவியல் அறிவியல் துறையினருக்கு தகவல் கொடுத்து அதன்பேரில் அவர்கள் வந்தார்கள். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் உதவி ஆய்வாளர் தனிப்பிரிவிற்கு தகவல் கொடுத்தார். நீங்கள் தடய அறிவியல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்ததை எப்போது தெரிந்து கொண்டீர்கள் என்றால் நான் விசாரிக்கும்போது தெரிந்துகொள்ளவில்லை. வழக்கு நாட்குறிப்பில் வழக்கின் அன்றாட குறிப்புகளை குறிப்பேன். அன்று தடய அறிவயில் துறையினரை காவல்நிலையத்திற்கு அழைத்து

காவல்நிலையத்தில் நிறுத்தி வைத்திருக்கும் வண்டியை ஆய்வு செய்ய நான் கேட்கவில்லை. 11.09.2022 ஆம் தேதி சாட்சிகள் ரேவதி, பொன்னுசாமி, மோகன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். மேற்சொன்ன 3 சாட்சிகளின் விசாரணையின் போது அவர்கள் பயன்படுத்திய செல்போன் எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் தகவல் சொன்ன நபர் தகவல் பெற்ற நபர் ஆகிய இருவரும் அந்த சமயத்தில் செல்போன் மூலமாக தகவல் பரிமாறிக்கொண்டார்களா என்று உங்கள் புலன்விசாரணையில் தெரிந்துகொண்டீர்களா என்றால் இல்லை. அவர்கள் இருவரும் வேறு வேறு இடத்தில் சம்பவ சமயத்தில் இருந்தார்கள் என்ற கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. பிணவறையில் 2 மணி நேரம் இருந்தேன். நீங்கள் பிணவறையில் இருந்தபோது சம்பவ நடந்த இடத்திற்கு அருகாமையில் இருந்த நபர்கள் வந்துவிட்டார்கள் என்று சொன்னால் விபத்து நடந்த இடத்தில் வீடுகள் இல்லை. கொட்டகாளிப்பாளையம் சம்பவ இடத்திலிருந்து ஒன்றரை கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது 5, 6 நபர்கள் இருந்தார்கள். மேற்சொன்ன 5, 6 நபர்களில் பிணவறையில் நான் இருக்கும் போது பொன்னுசாமி மட்டும் வந்தார். தாங்கள் சொல்லுகிற நபர்கள் மீது தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறியதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் தவறு. இவ்வழக்கில் எதிரிகளை கைது செய்வதற்கு முன்பாகவே சம்பவத்தில் பயன்படுத்திய வாகனங்கள் கைப்பற்றப்பட்டது என்று சொன்னால் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டது. ஆகையால் வழக்கில் பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் அனைத்தும் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. ஜெகநாதன் இடத்தை சுற்றியுள்ள எத்தனை குவாரிகள், கிரசர்கள்

உள்ளது என வட்டாட்சியர் மூலம் தெரிந்து கொண்டு வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பிணத்தை வாங்க மறுத்து தர்ணா செய்த மக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் அழுத்தத்தின் காரணமாக முறையாக புலன் விசாரணை செய்யாமல் வழக்கு ஆவணங்களை ஜோடித்துள்ளீர்கள் என்று சொன்னால சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.23 18:24:53 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**S.C.No.56/2023**

**PW.20 : ஜெயராமன்**

**தேதி : 23.02.2026**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்) (1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகியுள்ளார்கள்.)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**Cr.M.P. 93/2026, 115/2026 மனுவில் 20.02.2026 தேதியன்று உத்தரவிடப்பட்டு சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 1, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் தொடர்ச்சியாக சமூக ஆர்வளர்கள் போராட்டம் செய்ததால் உங்களை இந்த வழக்கில் தொடர்புலன்விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டீர்கள் என்று சொன்னால் உயர் அதிகாரிகள் என்னை புலன்விசாரணை அதிகாரியாக நியமித்தார்கள். நான் 15.09.2022 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு புலன்விசாரணை தொடங்கினேன். நான் ரேவதி, பொன்னுசாமி, அபிசேஷ், காளியம்மாள், மோகன், முருகானந்தம்,

பொன்னுசாமி, ராஜ்குமார் ஆகியோரை விசாரித்தேன். ரேவதி, பொன்னுசாமி, மோகன்ராஜ் ஆகியோர்களை நீங்கள் 16 ஆம் தேதி விசாரித்ததாக வாக்குமூலங்களில் உள்ளது என்று சொன்னால் சரிதான். பெரியசாமியின் வாக்குமுலத்தில் 17 ஆம் தேதி பதிவு செய்ததாக உள்ளது என்று சொன்னால் சரிதான். பொன்னுசாமி வாக்குமூலத்தில் ரஞ்சித் என்பவரது பெயரை பின்னால் தெரிந்து கொண்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். பொன்னுசாமி யாரிடமிருந்து என்று ரஞ்சித்குமார் என்று பெயரை தெரிந்துகொண்டதாக கூறவில்லை என்று சொன்னால் சரிதான். தூள்சண்முகத்தை நீங்கள் விசாரித்த போது விபத்து குறித்து காவல்நிலையத்திற்கு அவர் தகவல் சொன்னதாகவும் அப்போது காவல்நிலையத்தில் பேசிய காவலர் தங்களுக்கும் தகவல் வந்துவிட்டதாகவும் போலிசார் அங்கு வந்துகொண்டிருப்பதாக கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு 10.09.2022 ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு சொன்னதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் டீசல் பேரலை நீதிமன்றத்திற்கு நான் அனுப்பி வைக்கவில்லை. புவியியல் ஆய்வாளர் ஜெயபாலை நீங்கள் விசாரணை செய்தபோது 08.09.2022 அன்று செல்வக்குமார் குவாரியை மூடியபோது யாரும் இல்லாததால் அலுவலகம்வந்தேன் என்று உங்கள் விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அ.சா.ஆ.21, ஆ.சா.ஆ.22 ஆகிய அறிக்கைகளில் இரண்டு வாகனங்களிலும் பிரேக் எந்த நிலையில் இருந்தது என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். ஆகையால் இயந்திர கோளாரால் விபத்து நடக்கவில்லை என்று கொடுத்த அறிக்கை சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில்

வாகனத்திலிருந்து பெயிண்டையோ, ரத்தத்தையோ சேகரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல சொன்ன நேரத்தில் சேகரித்த மாதிரிகளை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே பொய்யாக செய்து வைத்திருந்த விசாரணையின் தொடர்ச்சியாக அதற்கு ஆதரவாக தாங்களும் பொய்யான ஆவணங்களை ஏற்படுத்தி பொய்யான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் இவ்வழக்கினை வலுப்படுத்த வேண்டும் என்பதற்காக உங்கள் தூண்டுதலின் பேரிலும், கட்டாயத்தின் பேரிலும் சந்தோஷ், புவனேஷ் ஆகியோர்கள் மூலம் 164 குவிமுச வாக்குமூலம் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. முறையான ஆவணங்களை பரிசோதனை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரிக்காததால் தான் நீதிமன்றத்திற்கு அனைத்து ஆவணங்களும் தாமதமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. விசாரணைக்காக வந்த 3ம் எதிரியை பொய்யாக குற்றவாளியாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>Cr.M.P.94/2026 மனுவில் 20.02.2026 தேதியன்று உத்தரவிடப்பட்டு சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்குச்சொத்துக்களை கைப்பற்றும்போது அவ்வப்போது படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பீர்கள் என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்தில ஒப்புவிக்காத கைப்பற்றிய சொத்துக்களை காவல்நிலைய

பாராவசம் ஒப்புவித்து அதற்குரிய பதிவேட்டில் குறிப்பு வைக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். இருசக்கர வாகனத்தையும், Bolero Pickup வாகனத்தையும் எந்த தேதியில் காவல்நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டது என்று அதற்குரிய பதிவேட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 07.10.2022 ஆம் தேதி தடய ஆய்வக உதவி இயக்குநர் பிரகாஷ் வந்த போது காவல்நிலையத்தில் நான் இருந்தேன். அவர் யார் அழைப்பின் பேரில் எந்த தேதியின் அழைப்பின் பேரில் அவர் காவல்நிலையம் வந்தார் என்றால் என்னுடைய அழைப்பின் பேரில் காவல்நிலையம் வந்தார். தடய இயக்குநரை முறைப்படி கடிதம்மூலம் வரவைக்க வேண்டும் என்றால் கைபேசி மூலமும் வரவைக்கப்பட்டார். தடய அறிவியல் இயக்குநர் பிரகாஷ் அவர்களுக்கு எந்த தேதியில் அழைத்தேன் என்று தேதி குறிப்பிடவில்லை என்று சொன்னால் 07.10.2022 அன்று நான் தொலைபேசி மூலம் அவரை அழைத்தேன். உங்களுடைய விசாரணை சமயத்தில் 3 வது சாட்சி மோகன் தான் புகைப்படம் எடுத்ததாகவோ, புகைப்படத்தையோ உங்களிடம் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் என்னிடம் கொடுக்கவில்லை. வழக்கு சம்மந்தமாக ஆவணம் ஒப்படைக்கப்படடால் அதற்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்ற வேண்டும் என்று சொன்னால் சரிதான். மோகனிடமிருந்து எந்த ஆவணமும் கைப்பற்றவிலலை என்று சொன்னால் சரிதான். இறுதி அறிக்கையில் எதிரிகளுக்கு கொடுக்கவேண்டிய ஆவணங்களில வரிசை எண்.19–ல் எதிரிக்கு வழக்கு தொடர்பான அழைப்புகள் தொடர்பான சிடிஆர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நீங்கள் இவ்வழக்கு தொடர்பாக சிடிஆரை இவ்வழக்கிற்காக பாதகம் ஆகும் என்பதால் அதை நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள்

போராட்டங்களின் அழுத்தங்கள் காரணமாகவும், அரசியல் அழுத்தங்களின் காரணமாகவும் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளர் தனது அறிக்கையில் Bolero Pickup வாகனத்தை பற்றி சொல்லும்போது அதன் இடது பக்க முன் பக்க டயர் கிழிந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நடந்த விபத்தை போராட்டக்காரர்களின் அழுத்தத்தின் காரணமாக கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.4 பெரியசாமி எனது விசாரணையில் 3 ஆண்டுகளுக்கு முன்பு 2019 ஆம் ஆண்டு ஜெகநாதனுக்கும் செல்வக்குமாருக்கும் வாய்த்தகராறு வந்து ஜெகநாதன் என் வீட்டிற்கு வந்துவிடடார் என்றும் கேட்டை தூக்கி எரிந்துவிட்டு 6 பேர் வடமாநிலத்தவர்கள் செல்வக்குமார் கல்குவாரியில் வேலை செய்பவர்கள் ஜெகநாதனை அடித்துபோட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் என்றும், அதன்பிறகு நான் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து ரஜினிகாந்த் மருத்துவமனைக்கு ஜெகநாதனை சிகிச்சைக்கு அனுப்பி வைத்து பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம் என்றும் மருத்துவமனையில் ஜெகநாதன் 30 நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றும் ஜெகநாதன் 2 மாத காலம் வீட்டில் இருந்தார் என்றும் அதன்பிறகு நிலம் மாசாகிறது என்றுநானும் ஜெகநாதனும் செல்வகுமாரிடம் சொல்லியதாகவும் அதற்கு செல்வக்குமார் எதுவும் சொல்லவில்லை என்று முதல்விசாரணையில் கூறியது போல் உங்களிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து கரூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் யார் கொண்டு சென்றார்கள் என்று விசாரித்தீர்களா என்றால விசாரிக்கவில்லை. செல்வக்குமார் ஜெகநாதனை பார்த்து என்னைக்காக இருந்தாலும் உன் சாவு என் கையில தான் என்று பெரியசாமி நீதிமன்றத்தில்

கூறியதுபோல உங்கள் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் சொன்ன மாதிரி எந்த விதமான முறையான புலன்விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் எதிரிகளை சேர்க்க வேண்டும் என்று போராட்டம் செய்தவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரத்தை நீங்கள் மறைக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.23 18:24:58 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.